P.R.NO. 750 Date: 17-11-2020

# பத்திரிக்கை செய்தி

## கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்

கால்நடை மருத்துவ வசதி கிடைக்கப்பெறாத கிராமங்களில், கால்நடைகளின் நலன் பாதுகாக்கும் பொருட்டு கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம் நடத்த அரசு உத்தரவிட்டுள்ளது.

அதற்கிணங்க 2020–2021ம் ஆண்டில், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 106 கால்நடை மருந்தகத்திற்கும் ஒவ்வொரு கால்நடை மருந்தகத்திலும் தலா ஒரு முகாம்கள் வீதம், 107 முகாம்கள் நடத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2020–21–ம் ஆண்டில் நவம்பர்–44, டிசம்பர்–56, ஜனவரி–07, முகாம்களும் நடைபெற உள்ளன.

கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தல், குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், மலடு நீக்கம், செயற்கைமுறை கருவூட்டல் ஆகிய பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தாதுஉப்பு கலவை இலவசமாக வழங்கப்படும். முகாம்கள் நடத்தப்படும்போது கால்நடை வளர்ப்போர் இந்த வாய்ப்பை பயன்படுத்தி கால்நடைகளை அழைத்து சென்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியர்
தஞ்சாவூர்.

மண்டல இணை இயக்குநர்
கால்நடை பராமரிப்புத் துறை,
தஞ்சாவூர்.

11.11.2020

11/11/2020

11/11/2020